*பிரஸார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை - 4*
*01 09 2025 MONDAY 12 40 PM*
*ஆகாஷ்வாணி - செய்திகள்*

***<u>தலைப்புச் செய்திகள்</u>***

- ***தீவிரவாத பிரச்சினையில் இரட்டை நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.***
- ***சீனாவில் நடைபெற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு உச்சி மாநாட்டின் நிறைவில், Tianjin பிரகடனம் வெளியிடப்பட்டது.***
- ***ஜம்முவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று ஆய்வு மேற்கொள்கிறார்.***
- ***அயலக தமிழர் நல வாரியம் உட்பட வெளிநாடுவாழ் தமிழர்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை மாநில அரசு செயல்படுத்தி வருவதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.***
- ***ஆப்கானிஸ்தானில் நேரிட்ட நிலநடுக்கத்தில் 250 பேர் உயிரிழந்தனர். 500க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.***

*>>>>><<<<<*

***தீவிரவாத பிரச்சினையில் இரட்டை நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.***

***சீனாவின் Tianjin நகரில் நடைபெறும் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு உச்சி மாநாட்டில் இன்று பங்கேற்றுப் பேசிய அவர், கடந்த 40 ஆண்டுகாலமாக தீவிரவாத அச்சுறுத்தல்களை இந்தியா எதிர்கொண்டு வருவதாக கூறினார்.***

***பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்குப் பிறகு, இந்தியா மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக இருந்த அனைத்து நாடுகளுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வதாக பிரதமர் குறிப்பிட்டார்.***

*தீவிரவாதத்திற்கு எதிராக உறுதியான நிலைப்பாட்டை, உறுப்பு நாடுகள் எட்டி, அதனை முற்றிலுமாக ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.*

*பாதுகாப்பு, இணைப்பு, வாய்ப்பு ஆகிய மூன்றும் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் அடிப்படையாக திகழ வேண்டும் என்று இந்தியா எதிர்நோக்குவதாக அவர் தெரிவித்தார்.*

*வளர்ச்சிக்கான புதிய வாய்ப்புகளை இந்தியா கண்டறிந்து வருவதாகவும், இந்தப் பயணத்தில் உறுப்பு நாடுகள் ஒரு பகுதியாக விளங்க வேண்டும் என்றும் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டார்.*

*இதையடுத்து. ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புட்டினுடன், பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தினார்.*

*திரு. புட்டினுடன் மேற்கொள்ளும் பேச்சுவார்த்தைகள் எப்போதும் தீர்க்கமானவையாக அமையும் என்று இந்த சந்திப்புக்கு முன்னர் தமது சமூகவலைதள பக்கத்தில் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.*

*>>>>><<<<<*

*சீனாவில் நடைபெற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு உறுப்பு நாடுகளின் தலைவர்கள் உச்சி மாநாடு நிறைவுற்றதை அடுத்து. Tianjin பிரகடனம் இன்று வெளியிடப்பட்டது.*

*தீவிரவாதத்திற்கு எதிரான தெளிவான. ஒருமித்த கருத்தை வெளிப்படுத்தியுள்ள இந்தப் பிரகடனத்தில், உறுப்பு நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பில் இந்தியா ஆற்றி வரும் பங்களிப்புக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*கடந்த ஏப்ரல் மாதம் பஹல்காமில் நிகழ்ந்த தீவிரவாத தாக்குதலுக்கு வலுவான கண்டனம் தெரிவிக்கப்பட்டிருப்பதோடு, அதற்கு காரணமான தீவிரவாத அமைப்புகள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.*

*அனைத்து வடிவிலான தீவிரவாதத்திற்கு எதிர்ப்பு தெரிவித்ததோடு, எல்லை தாண்டிய தீவிரவாத நடவடிக்கைகளை முறியடிக்கும் வகையில், சர்வதேச நாடுகள் ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டும் என்று அந்த பிரகடனத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.*

*>>>>><<<<<*

*ஜம்முவில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று ஆய்வு மேற்கொள்கிறார்.*

*வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஹெலிகாப்டர் மூலமாக பார்வையிடும் திரு. அமித் ஷா, ராஜ்பவனில் நடைபெறும் ஆய்வுக் கூட்டத்திலும் பங்கேற்கிறார்.*

*இக்கூட்டத்தில், பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படும் நிவாரணம் மற்றும் மீட்புப் பணிகள் குறித்து விவாதிக்கப்படவுள்ளது.*

*இதனைத் தொடர்ந்து, கட்ரா, மாதா வைஷ்ணோ தேவி முகாம் மற்றும் காக்ரயால் பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்திக்கிறார்.*

*மேகவெடிப்பு மற்றும் பெருவெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள கிஸ்துவர் மாவட்ட பகுதிகளையும் திரு. அமித் ஷா இன்று பார்வையிடுகிறார்.*

*>>>>><<<<<*

*கனமழை காரணமாக ஆறு நாட்களாக மூடப்பட்டிருந்த ஜம்மு – ஸ்ரீநகர் தேசிய நெடுஞ்சாலையில் போக்குவரத்து இன்று மீண்டும் தொடங்கியது.*

*ஜம்மு கஷ்மீரில் கடந்த 14 ஆம் தேதிமுதல் பெய்த கனமழையால் இதுவரை 136 பேர் உயிரிழந்தனர். நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.*

*மீட்புப் பணிகளை பார்வையிட்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய ஜம்மு கஷ்மீர் முதலமைச்சர் திரு. உமர் அப்துல்லா, முழுமையான மறுசீரமைப்பு பணிகளுக்கு 20 நாட்கள் ஆகும் என்று தெரிவித்துள்ளார்.*

*>>>>><<<<<*

*அயலக தமிழர் நல வாரியம் உட்பட வெளிநாடுவாழ் தமிழர்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்தி வருவதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.*

*ஜெர்மனியின் Cologne நகரில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றுப் பேசிய அவர், வேர்களைத் தேடி திட்டத்தின் மூலம், 292 வெளிநாடுவாழ் தமிழர்கள் தங்களது உறவுகளை தேடிக் கண்டுபிடித்திருப்பதாக கூறினார்.*

*வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் தங்களது சொந்த கிராமங்களில் பயிலும் அரசு பள்ளி மாணவர்களுக்கு கல்வி உதவி ஆற்ற வேண்டும் என்று முதலமைச்சர் கேட்டுக் கொண்டார்.*

*>>>>><<<<<*

*சுதந்திரப் போராட்ட வீரர் பூலித்தேவனின் 310வது பிறந்த நாள் இன்று கொண்டாடப்படுகிறது.*

*இதையொட்டி, தென்காசி மாவட்டம், நெற்கட்டும்சேவலில் அமைந்துள்ள மணிமண்டபத்தில் உள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அமைச்சர்கள் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், திரு. தங்கம் தென்னரசு உள்ளிட்ட பலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.*

*>>>>><<<<<*

*நாடுமுழுவதும், மக்களின் குடிநீர் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில், ஜல் ஜீவன் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.*

*இதன் ஒரு பகுதியாக, தமிழகத்தின் காஞ்சிபுரம் மாவட்டம், சின்னசமுத்திரம் ஊராட்சியில், குடிநீர் வழங்கல் பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக பயனாளிகள் தெரிவித்தனர்.*

*(சவுண்ட் பைட் – பயனாளிகள் 36 செகண்ட்)*

*>>>>><<<<<*

*நாட்டில் தொலைத் தொடர்புதுறை மிகப் பெரிய அளவில் வளர்ச்சி கண்டிருப்பதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. ஜோதிராதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.*

*அடுத்த மாதம் இந்திய மொபைல் காங்கிரஸ் நடைபெறவுள்ள நிலையில், அதுதொடர்பான செயலியை புதுதில்லியில் அவர் இன்று வெளியிட்டுப் பேசினார்.*

*தகவல் பரிமாற்றத்திற்கு மட்டுமல்லாமல், வர்த்தகம், வாழ்வாதாரம், உணர்வு பிணைப்புகளுக்கும் தொலைத்தொடர்பு தொழில்நுட்பம் காரணமாக திகழ்வதாக அவர் தெரிவித்தார்.*

*அடுத்த மாதம் நடைபெறவுள்ள இந்த தொழில்நுட்ப மாநாடு, இத்துறையில் நாடு அடைந்துள்ள முன்னேற்றத்தை காட்டுவதாக அமையும் என்று அமைச்சர் குறிப்பிட்டார்.*

தொலைத்தொடர்புத்துறை வளர்ச்சி மூலமாக, விவசாயிகள், பள்ளிக் குழந்தைகள் வாழ்வில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் மற்றும் சிறு குறு நடுத்தர தொழில்நிறுவனங்களின் செயல்பாட்டில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்த விவாதம் இந்த மாநாட்டில் நடைபெறும் என்று திரு. ஜோதிராதித்ய சிந்தியா தெரிவித்தார்.

>>>>><<<<<

ஹிமாச்சலப்பிரதேசம் மற்றும் உத்ரகாண்டின் சில பகுதிகளில் இன்று கன மழை முதல் அதிகனமழை வரை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதையடுத்து அப்பகுதிகளில் சிவப்பு நிற எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கிழக்கு ராஜஸ்தான், ஹரியானா, சண்டிகர், தில்லி. ஜம்மு காஷ்மீர், ஒடிசா, பஞ்சாப், உத்தரபிரதேசத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த இரண்டு நாட்களுக்கு கனமழை முதல் அதிகனமழை வரை பெய்யக்கூடும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

சத்திஷ்கர், ஆந்திரப்பிரதேசம், கர்நாடகா, குஜராத், மஹாராஷ்ட்ரா, கேரளா, கோவாவில் சில பகுதிகளில் நாளை மறுநாள் வரை கனமழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

ஹிமாச்சலப்பிரதேசதம், சம்பா மாவட்டத்தில் ஏற்பட்ட மழை காரணமாக மணிமகேஷ் யாத்திரை மேற்கொண்ட 16 பக்தர்கள் உயிரிழந்தனர்.

மழை பாதிப்பில், 15 ஆயிரம் பக்தர்கள் சிக்கியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மீட்புப் பணிகளில் தேசிய மற்றும் மாநில பேரிடர் மீட்பு படையினர், காவல்துறை மற்றும் உள்ளூர் மக்கள் ஈடுபட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

>>>>><<<<<

ஆப்கானிஸ்தானில் நேற்றிரவு நேரிட்ட நிலநடுக்கத்தில் 250 பேர் உயிரிழந்தனர். 500க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

அங்குள்ள குனார் மாகாணம் மற்றும் நங்கர்ஹர் மாகாணத்தின் ஜலாலாபாத் இடையே இந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது, ரிக்டர் அளவில் 6ஆக பதிவாகியுள்ளது.

*உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.*

*பாதிப்புக்குள்ளான பகுதிகளில் மீட்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக சர்வதேச செய்தி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.*

*இந்த நிலநடுக்கத்தின் தாக்கம், தலைநகர் தில்லி மற்றும் பாகிஸ்தானிலும் உணரப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.*

*>>>>><<<<<*

*ஆசியக் கோப்பை ஹாக்கிப் போட்டியில் இந்தியா இன்று கஜகஸ்தானை எதிர்கொள்கிறது.*

*இந்தப் போட்டி இரவு மணி 7.30க்கு நடைபெறும்.*

*>>>>>END<<<<<*